**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**அசல் வழக்கு எண். 34/2022**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 05.03.2026-ஆம் நாளாகிய இன்று மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 05.03.2026 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | இராமலிங்கம் | வயது. | 72 |
| த.பெ. | சிவக்குழந்தை | | |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

1) நான் இரண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் படிக்கத் தெரியாது என்றால் சரிதான், தமிழை சுமாராக படிப்பேன். இந்த வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்து உள்ளார்கள் என்று தெரியுமா என்றால் எங்கள் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியும் *( சாட்சி நீண்ட நேரம் யோசித்துவிட்டு பதில் சொல்கிறார்)*. எனக்கு சொந்த வீடு மற்றும் நிலம் உள்ளது என்றால் சரிதான். என் மனைவியான வாதி 50 வருடங்களாக வழக்கு சொத்தில் அனுபவத்தில் இருப்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அனுபவத்திற்கான ஆவணங்கள் மற்றும் பூர்வீக சொத்துக்களை என் பாட்டனார், தகப்பனார் அனுபவித்து என் மனைவி அனுபவிக்கும் சொத்திற்கான வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். பூர்வீக சொத்திற்கான பதிவு ஆவணம் வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்திருக்கின்றேன் என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்திருக்கிறேன். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.3 ஆவணமான 'அ' பதிவேட்டில் வழக்கு சொத்தானது யார் பெயரில் உள்ளது என்றால் அரசு (Government) பெயரில் உள்ளது. என் மனைவி 50 வருடங்களாக வழக்கு சொத்தை அனுபவிப்பது குறித்து எதிர்மனுதாரர்களுடன் பட்டா வேண்டி மனு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்தேன். அதற்கு அதிகாரிகள் உங்களுடைய அனுபவத்தில் தானே சொத்து உள்ளது எதற்கு தனியாக பட்டா கேட்கிறீர்கள் என்று சொன்னார்கள். நான் கொடுத்த மனு மற்றும் அதிகாரிகள் சொன்ன பதில்கள் சம்மந்தமான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுகுறித்து ஞாபகம் இல்லை.

2) தற்போது வழக்கு சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் என் மனைவியின் அனுபவத்தில் உள்ளது. வழக்கு சொத்தின் விபரங்கள் எனக்கு தெரியும். சொத்தின் புல எண். 60/6 அதன் விஸ்தீரனம் சுமார் 2 ஏக்கர் இருக்கும். வழக்கு சொத்தின் நான்கு எல்லையானது கிழக்கு பக்கத்தில் இறந்துவிட்ட என் ஊரை சேர்ந்த கலியன் என்பவரின் நிலத்திற்கும் மேற்கு மற்றும் வடக்கு பக்கம் எனக்கு சொந்தமான இடத்திற்கும் தெற்கு பக்கம் முனியப்பன் கோவிலும் உள்ளது. வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு சொத்தின் 4 எல்லைகள் என்னவென்றால் அதுகுறித்து எனக்கு ஞாபகம் இல்லை. வழக்குரையில் வழக்கு சொத்தின் 4 எல்லைகள் குறித்து எதுவும் சொல்லப்படவில்லை என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் என்ன சாகுபடி செய்து வருகிறோம் என்றால் 45 வருடங்களாக முந்திரி தோப்பு, 50 வருடங்களாக பனந்தோப்பு, 20

வருடங்களாக தைல மரம், இடையிடையே 30 வருடங்களாக சவுக்கு மரமும் மற்றும் பனங்கிழங்கு உற்பத்தியும் செய்து வருகிறோம். கடந்த 10 வருடங்களுக்குள் புயல் மற்றும் பெரும் மழையால் சாகுபடி செய்த பயிர்கள் அழிந்து பெரு நட்டம் ஏற்பட்டது என்றால் சரிதான். ஏற்பட்ட நட்டத்திற்கு இழப்பீடு ஏதேனும் அரசிடம் பெற்றுள்ளேனா என்றால் இழப்பீடு பெற்றுள்ளேன். சுமார் 10 முதல் 20 ஆயிரம் இருக்கும். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் சாகுபடி செய்வதாக சொன்ன விபரங்களை வழக்குரையில் என் மனைவியான வாதி சொல்லியுள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3) என் மகன் பத்திர எழுத்தரா என்றால் ஆமாம். பத்திரம் பதிவு செய்வதற்கு GPS மூலமாக புகைப்படம் எடுக்க வேண்டும் என்றால் அதுகுறித்து தெரியாது. என் மனைவிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் இவ்வழக்கு சொத்திற்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் அனுபவத்தில் இருப்பது சம்மந்தமாக எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் பல வருடங்களாக அனுபவத்தில் இருப்பதால் தான் வழக்கு சொத்து எங்களுக்கு உரிமையானது என்று சொல்கிறேன். பொய்சொல்லவேண்டிய அவசியம் இல்லை. 17.09.2016 அன்று எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்திலிருந்து காலி செய்ய சொன்னதன் பிறகு தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு முன்பும் அரசு அதிகாரிகள் காலி செய்ய சொல்லியது சம்மந்தமாக ஏற்கனவே வேறொரு வழக்கினை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தோம். அரசுக்கு சொந்தமான நிலத்திலிருந்து கனிம வளங்களை கொள்ளையடிக்கும் நோக்கோடு இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், வழக்கு சொத்து அரசிற்கு சொந்தமானது என்றாலும் சரியல்ல, பூர்வீகமாக நாங்கள் தான் வழக்கு சொத்தை அனுபவத்திலிருந்து விவசாயம் செய்து வருகிறோம்.

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

(S/D.Thiru.D. Yuvaraj)
District Munsif cum Judicial Magistrete,
Portonovo.